உ

சிவமயம்

# யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

## நிறுவுநர் ஆறுமுகநாவலர் நினைவுப் பேருரையும், பரிசுத் தினமும் - 2001/ 2002

**2002 நவம்பர் மாதம் 28 ம் நாள்**
**வியாழக்கிழமை காலை 9.30 மணி**

✵ ✵ ✵

முதன்மை விருந்தினர்:

**திரு. கதிரிப்பிள்ளை கந்தசாமி அருள்வேல்** அவர்கள்
(சிரேட்ட விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

✵ ✵ ✵

சிறப்பு விருந்தினர்:

**திரு. ஆறுமுகம் இராஜகோபால்** அவர்கள்
(கோட்டக்கல்வி அதிகாரி, யாழ். கோட்டம்)

✵ ✵ ✵

நிறுவுனர் நினைவுப் பேருரை

**சைவப் புலவர் சு. செல்லத்துரை** அவர்கள்
(செயலாளர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், முன்னாள் அதிபர், இளவாலை மெய்கண்டான் ம.வி)

✵ ✵ ✵

பரிசில் வழங்கல்

**திருமதி. ஸ்ரீரமணி அருள்வேல்** அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- மௌன அஞ்சலி
- வரவேற்புரை

  - திரு. மா. சண்முகரத்தினம் (ஆசிரியர்)
- அதிபர் அறிக்கை
- நிறுவுநர் ஆறுமுக நாவலர் நினைவுப் பேருரை

  - சைவப்புலவர். க. செல்லத்துரை அவர்கள்
- சிறப்பு விருந்தினர் உரை
- முதன்மை விருந்தினர் உரை
- பரிசு வழங்கல்
- கலை நிகழ்ச்சிகள்
- நன்றியுரை
- பாடசாலைக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை 2001 - 2002

எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய முதன்மை விருந்தினர், யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை சிரேட்ட விரிவுரையாளர் திரு. கதிரிப்பிள்ளை கந்தசாமி அருள்வேல் அவர்களே!

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. ஆறுமுகம் இராஜகோபால் அவர்களே!

கல்விப் பணிமனையைச் சார்ந்த பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, உத்தியோகத்தர்களே!

ஏனைய கல்லூரிகளின் மதிப்பார்ந்த அதிபர்களே!

நிறுவுனர் உரையை ஆற்றவந்திருக்கும் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களே!

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே!

பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே!

ஆசிரிய ஆலோசகர்களே!

நலன் விரும்பிகளே!

பெற்றோர்களே!

எமது பாடசாலை ஆசிரியர்களே!

எமது அன்பு மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவரையும் இக்காலை வேளையிலே கரம் கூப்பி, முகம் மலர்ந்து, அகமிக மகிழ்ந்து வரவேற்கின்றேன். தங்களின் அன்புடன் கூடிய ஆதரவும், ஆசிகளும் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென்ற பேரவாவுடன் யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் 2001 / 2002 ஆண்டுக்குரிய பரிசில் தின அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

எமது இன்றைய பரிசுத் தினத்தில் முதன்மை விருந்தினராக எமது அழைப்பினை ஏற்று எம்மைக் கௌரவித்துக் கொண்டிருக்கும், விரிவுரையாளர் திரு. கதிரிப்பிள்ளை கந்தசாமி அருள்வேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை பாடசாலைச் சமூகம் நன்றி கலந்த பெருமதிப்புடன் வரவேற்கின்றது.

தாங்கள் ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்தின் சைவபாரம் பரியங்களை கடைப்பிடிக்கும் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் பெற்று தொடர்ந்து சைவமும் தமிழும் கலந்தோடுகின்ற பெருமை பெற்ற வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலே இடைநிலைக் கல்வியைப் பெற்று உயர்தர கல்வியை புகழ்பூத்த யாழ் மத்திய கல்லூரியில் கற்றுத் தேர்ந்து யாழ் பல்கலைக்கழகத்தில் 1981ல் வணிகமாணி பட்டத்தைப் பெற்று 1983 முதல் யாழ் பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளராக நியமனம் கிடைக்கப் பெற்றீர்கள். 1992ல் தாங்கள் பொருளியல் முதுமாணிப் பட்டத்தை பெற்றபின் சிரேட்ட விரிவுரையாளராக கடமையேற்று பணிபுரிந்து வருகின்றீர்கள்.

இவ்வாறான சிறப்புப்பட்டங்களையும், பதவிகளையும் பெற்றுக்கொண்ட தாங்கள் இப்பாடசாலையில் பழைய மாணவர் என்பதில் பாடசாலை சமூகம் பெருமை கொள்கிறது.

அது மாத்திரமன்றி தாம் கல்வி கற்ற பாடசாலைகளின் வளர்ச்சிப் பாதையில் பங்கு கொள்ள வேண்டும் என்ற பேரவாவுடன் யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளராகவும் பணிபுரிந்து வருகின்றீர்கள். யாழ் பல்கலைக்கழகத்தின் தொழிலாளர் கல்வி அலகின் இணைப்பாளர் பதவியினையும், இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் அங்கத்தவராகவும் அங்கம் வகிக்கின்றீர்கள். அதுமாத்திர மன்றி கணக்கியல் தொடர்பாக 10க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதி தங்கள் மாணவர்களின் திறனை மேம்படுத்த வழிகாட்டி யுள்ளீர்கள்.

உங்கள் அமைதியான போக்கும் திறமையும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழியாக அமைந்து இன்று தாங்கள் வகிக்கும் பதவிக்கு பெருமை தேடிக் கொண்டீர்கள்.

எமது சிறப்பு விருந்தினர் திரு. ஆ. இராஜகோபால் அவர்களே தாங்கள் ஆரம்பம் முதல் உயர்தரக் கல்வி வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே கற்றுத் தேறி இலங்கைப் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்திலே புவியியல் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி ஆசிரிய தொழிலை திருகோணமலை சென் யோசெப் கல்லூரியில் ஆரம்பித்து 1974 ம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று 1990ம் ஆண்டு வரை கடமை புரிந்தீர்கள். தொடர்ந்து சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகராகக் கடமை ஏற்றீர்கள். இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று தரம் I அதிபராக யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியில் கடமை புரிந்து 1999 ல் உதவிக் கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்று தற்போது யாழ் கல்விக் கோட்டத்தில் கல்வி அதிகாரியாக பணிபுரிந்து வருகின்றமை பெருமைக்குரியது.

நீங்கள் பல புவியியல் நூல்கள் எழுதியதுடன் செம்பியன் செல்வன் என்ற புனைப் பெயருடன் பல சிறுகதைகளையும் படைத்து, சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டு தமிழ் உலகிற்கு பெருமை சேர்த்துள்ளீர்கள். தங்கள் பிரசன்னம் எமக்கு மகிழ்ச்சியூட்டுவதாக வுள்ளது.

நிறுவுநர் நினைவுப் பேருரையை நிகழ்த்த வந்துள்ள சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள், சைவம், தமிழ் இரண்டையும் முதுபெரும் சொத்தாக கொண்டு தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பவர். அவரை இன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்குப் பொருத்தமானவர் எனத் தேடிக் கொண்டதில் பெருமையடைகின்றோம். வருடா வருடம் பல சைவப்புலவர்களை உருவாக்குவதில் முன்னின்று உழைத்து வரும் இவர் இளவாலை மெய்கண்டான் ம.வித்தியாலய அதிபராக கடமைபுரிந்து வித்தியாலயத்தை சிறப்படையச் செய்தவர். நாவலர் அடியொற்றி சைவப்புலவர் சங்கத்தின் செயலாளராக கடமையேற்று செயல்புரிந்து வருகின்றார் என்பது பெருமைக்குரியது.

இன்றைய பரிசுத்தினத்திலே நாம் கேட்ட போது எமது சிறார்களுக்கு தமது கைகளினால் பரிசினை வழங்க ஒப்புக்கொண்ட இன்றைய விழாவின் முதன்மை விருந்தினர் அவர்களது பாரியார் திருமதி அ. ஸ்ரீரமணி அவர்கள், யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வர்த்தக ஆசிரியராக கடமை புரிந்து வரும் அவரை இவ்வேளையிலே பெருமையுடன் வரவேற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைச் செயற்பாடுகள்:

எமது பாடசாலை ஒரு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பாடசாலையாகும். பாடசாலையின் ஸ்தாபகர் தமிழ் சைவ உலகறிந்த பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆவார். இவரது முயற்சியின் பயனாக 1848ம் ஆண்டில் சைவம் பெருக்கெடுத்தோடிய வண்ணார்பண்ணையிலே முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட சைவப் பாடசாலையென்ற பெருமையைப் பெற்று தமது 150 வது ஆண்டினைப் பூர்த்தி செய்து தலை நிமிர்ந்து நிற்கின்றது. இப்பாடசாலையின் மாணவர்களாக புகழ்பூத்த சைவப்பெரியார்களும் அறிஞர்களும் இருந் துள்ளார்கள். தற்போதும் இருக்கின்றார்கள். இவ்வாறான பெருமை பெற்ற பாடசாலையின் அதிபராகும் வாய்ப்பு எனக்கு 23.01.2001 இல் கிடைக்கப் பெற்றமையான யான் செய்த பாக்கியமே. இப்பாடசா லையின் இலட்சனை "தமிழோடு சைவம் ஓங்குக" என்பதேயாகும். அவ்வாறான பாடசாலையின் செயற்பாடுகளை அமைத்து நடைமுறைப்படுத்தி வரவேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

## முகாமைத்துவம்:

அதிபராகப் பொறுப்பேற்றபோது யான் முன்னர் 1999இல் இருந்து உப அதிபராகக் கடமை புரிந்த அனுபவம் பாடசாலையை நடாத்துவதற்கு உதவியது. இப்பாடசாலையைப் பொறுப்பேற்ற போது 304 மாணவர்களுடன் 19 ஆசிரியர்களும் கடமை புரிந்தனர். தற்போது ஆசிரியர் குழாமில் 15 நிரந்தர ஆசிரியர்களும், இருநாட்கள் சேவைபுரியும ஆசிரியர்கள் 02 பேரும் ஆங்கில பகுதிநேர ஆசிரியர் ஒருவரும், தொண்டர் ஆசிரியர் ஒருவருமாக அதிபருடன் மொத்தம் 20 ஆளணியினர் செயற்பட்டு வருகின்றனர். மாணவர் தொகை ஆரம்பப்பிரிவில் 153 பேரும் இடைநிலைப் பிரிவில் 189 பேருமாக மொத்தம் 342 மாணவர்கள் உள்ளனர். முகாமைத்துவக் குழுவில் அதிபருடன் திருமதி. சா. பழநிவேற்பிள்ளை, திரு. மா. சண்முகரத்தினம், திரு. க. யோகேஸ்வரன் ஆகியோருடன் திருமதி. ர. ஜெயராஜாவும் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலை நிர்வாக விடயங்களிலும் விசேட செயற்பாடுகளிலும் என்னுடன் ஒன்றாக இணைந்து பாடசாலை முன்னேற்றத்திற்கு உறுதுணையாகவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2001 இல் புதிதாக இணைந்தவர்கள்:

11 நிரந்தர ஆசிரியர்களுடன் 6 தற்காலிக ஆசிரியர்களும் பகுதிநேர ஆங்கில ஆசிரிய ஒருவரும், தொண்டர் ஆசிரியர் ஒருவருடனும் விஞ்ஞான ஆசிரியை திருமதி. ம. மகேந்திரன், வணிகமாணி ஆசிரியர் திரு. மா. சண்முகரத்தினம், ஆரம்பப் பயிற்சி ஆசிரியை திருமதி. க. ஞானகோபால், இருநாட்கடமை ஆசிரியராக சித்திர ஆசிரியை திருமதி. க. நிர்மலகுமார், பகுதி நேர ஆங்கில ஆசிரியராக திரு. சிறிஇராமலிங்கமும், செல்வி. சா. விநாசித்தம்பியும் ஆரம்பப் பயிற்சி ஆசிரியர் திரு. க. இரகுபதியும், திரு. கு. பஞ்சாட்சர சர்மா ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

## 2001 இல் மாற்றத்தில் சென்றவர்கள்

பாடசாலையின் நிரந்தர கணக்கியல் ஆசிரியராகவிருந்த திரு.செ. கமலநாதன் 01.05.2001 தொடக்கம் யா/ நாவாந்துறை றோ. க. வித்தியாலயத்திற்கு மாற்றம் பெற்றதுடன் இருநாட்கள் எமது பாடசாலையில் கடமை புரிந்து வருகின்றார். தற்காலிக ஆசிரியர்களாக கடமை புரிந்த திருமதி. கே. சிவனொளிச்செல்வன், திரு. மா. சிவநேசன், திருமதி. வி. ஜெயபாலச்சந்திரன் ஆகிய மூவரும் தமது நிரந்தரப் பாடசாலைக்குச் சென்றனர். திரு. க. இரகுபதி யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திற்கு மாற்றத்தில் சென்றார். திருமதி. இ. மணிவண்ணன். யா/ நாவாந்துறை றோ.க வித்தியாலயத்திற்கு மாற்றத்தில் சென்றுள்ளார். அத்துடன் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் திரு. சிறி இராமலிங்கம் தமது கடமையிலிருந்து விலகியதுடன் செல்வி. சா.விநாசித்தம்பி யா/ இந்து மகளிர் கல்லூரிக்கு நியமனம் பெற்றுச் சென்றுள்ளார்.

## வித்தியாலயத்தின் ஏனைய செயற்பாடுகள்:

### சைவசமய அபிவிருத்திக் குழு:

எமது பாடசாலையின் முக்கிய நோக்கம் மாணவரிடையே சிறந்த நல்லொழுக்க பண்புகளுடன் சைவ ஆசாரங்களை வளர்ப்பதேயாகும். அந்த வகையில் பாடசாலையில் அமைந்து செயற்படுகின்ற சைவசமய அபிவிருத்திக் குழு நோக்கத்தையுடைய பல வழிகளிலும் செயற்படுகின்றது. திருமதி. சா. புறநிவேற்பிள்ளையைத் தலைவராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மேற்படி குழுவில், திருமதி. ம. விஜயகுமார், செல்வி. க. மனோராணி, திருமதி. ஞா. ஜெகதீஸ்வரன், செல்வி. க. விஜிதா, செல்வி. ம. சுபாசினி ஆகியோருடன் மாணவர்களும் இணைந்து சமய விழாக்கள், நால்வர் குருபூசை, நவராத்திரி விழா, வெள்ளி தோறும் விசேட ஆராதனைகள் ஆகியவற்றை நடாத்தி வருவதுடன் பாடசாலை யில் அமைந்துள்ள நால்வர் கோயில் பரிபாலனத்தையும் நடாத்தி வருகின்றனர்.

## ஆசிரியர் கழகம்.

திருமதி. சா. பழநிவேற்பிள்ளையைத் தலைவராகக் கொண்ட இக்கழகம் செயலாளராக திருமதி. ச. பகீரதன், பொருளாளராக செல்வி. க. மனோராணியும் இணைந்து செயலாற்றுகின்றனர். வித்தி யாலயத்தின் சகல ஆசிரியரின் அங்கத்துவத்தையும் கொண்ட இக் கழகம் ஆசிரியர்களின் நலம் பேணலும் அவர்களின் இன்ப துன்பங் களிலும் மனப்பூர்வமாக பங்குபற்றி சிறப்பாகச் செயற்பட்டு வருகின்ற இக்கழகத்தினருக்கு நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட எனது வாழ்த்துக்கள்.

## பரீட்சைக் குழு:

அதிபரின் நெறிப்படுத்தலுடன் திரு. க. யோகேஸ்வரன், திருமதி.ர. ஜெயராஜா, திரு. மா. சண்முகரத்தினம் ஆகியோரைக் கொண்ட பரீட்சைக்குழு, பாடசாலைத் தவணைப் பரீட்சைகளையும், பொதுப் பரீட்சைகளையும் பொறுப்பேற்று நேர்மையுடனும் நம்பகத் தன்மையுடனும் செயற்பட்டு வருகின்றமை போற்றுதற்குரியது. இவர்களது சேவை மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

## கணிப்பீட்டுக் குழு (6–11)

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் குழுவில் திரு. க. யோகேஸ்வரன், திருமதி. சா. பழநிவேற்பிள்ளை, திருமதி. ச. பகீரதன் ஆகியோரை உள்ளடக்கிய குழுவுடன் திணைக்களத்தின் அங்கத்த வராக முதன்மை ஆசிரியர் திரு.கே. குலசேகரமுடன் அதிபரும் செயற்பட்டு கணிப்பீடுகள் செம்மையுற செயற்பட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட்டுத்துறை:**

விளையாட்டுத்துறைச் செயலாளராக செல்வி. த. விஜிதாவுடன் திருமதி. ர. ஜெயராஜா, திருமதி. ரா. குணரத்தினம், திரு. சு.யோகேஸ்வரன் ஆகியோர் இணைந்து செயற்பட்டு பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியை நடாத்துவதுடன் கோட்ட, வலய மட்டங்களுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதில் தமது கடமையைச் செவ்வனே செய்து வருகின்றனர். இவர்கள் மேலும் சிறப்பாகச் செயற்பட வாழ்த்துகின்றேன்.

**மன்றங்கள்:**

பாடரீதியாக சகல பாடங்களுக்கும் மன்றங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. தமிழ்மன்ற பொறுப்பாசிரியராக திருமதி. செ. உமாகரனும், கணித, விஞ்ஞான மன்ற பொறுப்பாசிரியர்களாக திரு. சு. யோகேஸ்வரன், திருமதி. ர. ஜெயராசா, திருமதி. ம. மகேந்திரனும், திருமதி ம. விஜயகுமார், ஆகியோரும் வர்த்தக மன்ற பொறுப்பாசிரியராக திரு. செ. கமலநாதனும், மனையியல் மன்றப் பொறுப்பாசிரியராக செல்வி. க. மனோராணியும், ஆங்கில மன்ற பொறுப்பாசிரியர்களாக திருமதி வ. சிவபாத விருதயர், செல்வி. சர்மிளா ஆகியோரும் சமூகக்கல்வி மன்ற ஆசிரியராக திருமதி. ச. பகீரதனும், கலை கலாசார மன்ற பொறுப்பாசிரியர்களாக திருமதி. ஞா. ஜெகதீஸ்வரனும், திருமதி க. நிர்மலகுமாரும் செயற்பட்டு வருகின்றனர்.

**மாணவர் ஒழுக்காற்றுக்குழு**

எம்மிடம் வரும் மாணவர்களை சமூகத்திற்கு நல்லதொரு பிரஜையாக உருவாக்கி வருவதில் எமது பாடசாலையின் அனுபவமிக்க ஆசிரியர் திரு. மா. சண்முகரத்தினம் அவர்கள் முன்னின்று உழைத்து வருகின்றார். அவர் மாணவர்களுக்குத் தேவையான உளத்துணை வள சேவைகளையும் ஆற்றி வருகின்றார். இவருடன் சேர்ந்து திரு. சு யோகேஸ்வரன், திருமதி. ர. ஜெயராசா, செல்வி. க. மனோராணி ஆகியோரும் கடமையாற்றி மாணவர்களை ஆற்றுப் படுத்தி வருகின்றனர். இவர்களது சேவை தொடர வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரணர் அணி

பாடசாலையில் இயங்கிவரும் குருளைச்சாரணர் படையணிப் பொறுப்பை செல்வி. த. விஜிதாவுடன் செல்வி. ம. சுபாஜினி அவர்களும் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றனர்.

## ஆரம்பப் பிரிவு செயற்பாடுகள்:

ஆரம்பப் பிரிவின் ஆசிரியர்களாக திருமதி. ரா. குணரத்தி னத்துடன், திருமதி. க. ஞானகோபால், திருமதி. ம. மகேந்திரன், திருமதி. க. ஸ்ரீஸ்கந்தராஜா, செல்வி. ம. சுபாசினி, செல்வி. த. விஜிதா ஆகியோர் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி வருகின்றனர். புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை யில் வகுப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

## பழைய மாணவர் சங்கம்

பழைய மாணவர்சங்கம் பாடசாலையின் அபிவிருத்தியில் முக்கிய செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. வருடாந்தம் உலக ஆசிரிய நாளை சிறப்பாக நடாத்தி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வினை எம்மால் மறக்க முடியாது. அதிபரை தலைவராகக் கொண்ட இச்சங்கத்தின் செயலாளராக திரு. வி. தயாபரனும் பொரு ளாளராக திரு. க. சிவகுமார் அவர்களும் சிறப்பாகச் செயற்பட்டு வருவது பெருமைக்குரியதாகும்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்:

பா. அ. சங்கம் வித்தியாலய வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது. பதவி வழியாக அதிபரை தலைவராகக் கொண்ட இச்சங்கம் செயலாளராக திரு. என். எஸ். ஜீவரத்தினம் அவர்களும் பொருளாளராக திருமதி. ர. ஜெயராஜாவும் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலை நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி ஒத்துழைப்பு வழங்கி வருவதுடன் ஆசிரியர் தின நிகழ்வினை சிறப்புற நடாத்தியமையை இவ்வேளையில் நினைவு கூருகின்றேன். அவர் களுக்கு எமது நன்றிகளும் நல்லாசிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் தர்மகர்த்தாசபை:

இச்சபை நாவலர் பாடசாலையுடன் இணைந்த ஒன்றாகும். நாவலர் தர்மங்களை பேணி வருவதுடன் பாடசாலைச் செயற் பாடுகளிலும் பங்கு கொண்டு உதவி வருகின்றது. சமய நிகழ்வுகள், குருபூசைகள், நால்வர் கோவில் பரிபாலனம் ஆகியவற்றுக்கான செலவுகளை அவர்களே ஏற்று நடாத்தி வருகின்றார்கள். இச்சபையின் தலைவராக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. செ. மகாலிங்கம் அவர்களும், செயலாளராக பாடசாலை அதிபர் திரு. ந. சிவராஜாவும், உறுப்பினர்களாக சைவப்புலவர் வ. கந்தசாமி, ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். அவர்களது உதவிகட்கு இவ்வேளையில் நன்றியைக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

## நன்றிகள்:

எவ்வளவோ வேலைப்பளுக்களுக்கு மத்தியில் எமது அழைப்பையேற்று இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்துள்ள திரு. கதிரிப்பிள்ளை கந்தசாமி அருள்வேல் அவர்கட்கும், சிறப்பு விருந்தினராக வருகை தந்து நல்லுரையாற்றிய திரு. ஆ. இராஜகோபால் அவர்கட்கும் பெருமனத்துடன் பரிசில்களை வழங்கி எம்மை கௌரவப்படுத்திய திருமதி ஸ்ரீரமணி அருள்வேல் அவர்களுக்கும் நிறுவனர்நாள் பேருரையை வழங்கிய சைவப்புலவர் அ. செல்லத்துரை அவர்களுக்கும், உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் அயற்பாடசாலை அதிபர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவர்க்கும் மிக்க நன்றிகள்

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் இன்றைய இந்நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய ஆசிரிய பெருந்தகைகளுக்கும் மாணவத் தலைவர்களுக்கும் எமது நன்றிகள்.

ந. சிவராஜா
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறும் மாணவர்களின் விபரம் 2001 / 2002

## தரம் -1- 2002

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| செல்வி. சி. வைஷ்ணவி | சுற்றாடல், பொதுத்திறன் |
| செல்வி. ஜெ. மிதுர்சினி | தமிழ், பொதுத்திறன் |
| செல்வி. த. சுஜீபா | கணிதம், பொதுத்திறன் |
| செல்வி. ப. சுதர்சினி | சமயம் |
| செல்வன். த. சுதன் | பொதுத்திறன் |
| செல்வி. நா. மேனகா | மனனஞ் செய்தல் |

## தரம் -1- 2001

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| பா. மியூட்டன் | சுற்றாடல், தமிழ், பொதுத்திறமை |
| அ. யோகேஸ்வரி | தமிழ், பொதுத்திறமை |
| பி.பிரியா | கணிதம், பொதுத்திறமை |
| ம. தனுசா | சமயம், பொதுத்திறமை |
| க. நுசாந்தி | பொதுத்திறமை |

## தரம் - 2

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| ஜெ. கிருஸ்ணலக்சுமி | தமிழ்மொழி |
| ப. சஸ்டிகா | சைவசமயம் |
| சா. டன்சன் | சுற்றாடல் |
| கி. செந்தூரன் | கணிதம் |
| சு. ஆதவன் | ஆங்கிலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 3 - 2001

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| நா. சருபியா | பொதுத்திறன் |
| ர. தட்ஷாயினி | பொதுத்திறன் |
| அ. தனலக்சிகா | பொதுத்திறன் |
| மா. நாகதுஸ்யந்தினி | பொதுத்திறன் |
| க. பிருந்தா | பொதுத்திறன் |
| யோ. சுரேகா | பொதுத்திறன் |
| இ. பிரணவன் | பொதுத்திறன் |
| ஜெ. துஸ்யந்தன் | பொதுத்திறன் |
| த. யூட்சாந்தன் | பொதுத்திறன் |
| வை. சாந்தரூபன் | பொதுத்திறன் |

## தரம் - 4

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| தி. திவாகரன் | சைவசமயம், கணிதம், சுற்றாடல், பொதுத்திறன் |
| ப. தயாபரன் | தமிழ், தமிழ் வாசிப்பு,பொதுத்திறன் |
| க. தாரணி | தமிழ், தமிழ் எழுத்து, ஆங்கிலம், பொதுத்திறன் |
| செ. பசோக்குமார் | ஆரம்ப விஞ்ஞானம், பொதுத்திறன் |
| அ. ஷிவானு | பொதுத்திறன் |
| சு. தனா | பொதுத்திறன் |
| இ. துர்க்கா | பொதுத்திறன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 5

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| க. ஆனந் | சைவசமயம், தமிழ் எழுத்து, பொது அறிவு, பொதுத்திறன் |
| த. தாட்சாயினி | தமிழ் உறுப்பெழுத்து, தமிழ் வாசிப்பு, கணிதம், ஆங்கிலம், அழகியல், பொது அறிவு, பொதுத்திறன் |
| க. மயூரி | தமிழ் வாசிப்பு, சுற்றாடல், பொதுத்திறன் |
| ஸ்ரீ. விவேக்கா | ஆரம்ப விஞ்ஞானம், பொதுத்திறன் |
| செ. பிரசாந்தி | அழகியல், பொதுத்திறன் |
| நா. பதுர்சிகா | ஆக்கம், பொதுத்திறன் |
| ப. நிறைஞ்சலா | பொதுத்திறன் |
| வி. நிலேக்கா | பொதுத்திறன் |

தேசிய மட்டம்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடைந்தோர்.

2001ம் ஆண்டு P. நிறைஞ்சலா

2002ம் ஆண்டு T. திவாகரன்

## தரம் - 6

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| க. லதா | சைவசமயம், சங்கீதம், ஆங்கிலம், பொதுத்திறமை |
| சி. ராஜ்கண்ணா | தமிழ், சுற்றாடல், பொதுத்திறமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஜெ. சுதர்சன் | சுகாதாரம், உடற்கல்வி,பொதுத்திறமை |
| சி. தவசீலன் | கணிதம், பொதுத்திறமை |
| சு. கோபிராஜ் | சித்திரம் |
| சு. பிருந்தாபன் | பொதுத்திறமை |
| ரா. பிரியதர்சினி | பொதுத்திறமை |
| த. ஜெனனி | பொதுத்திறமை |
| மு. குகனேஸ்வரி | பொதுத்திறமை |

## தரம் - 7

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| யோ. ரஜனிகலா | சைவசமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும், சமூகக்கல்வி, சங்கீதம், சுகாதாரம், உடற்கல்வி, ஆங்கிலம், பொதுத்திறமை |
| நா. ருசாந்தி | சித்திரம் |
| ஜெ. கோபிசாளினி | பொதுத்திறமை |

## தரம் - 8

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| சி. பிரியதர்சினி | சைவசமயம், தமிழ், பொதுத்திறமை |
| நா. மனோலயா | கணிதம், சமூகக்கல்வி, பொதுத்திறமை |
| சு. விஜிதகலா | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், ஆங்கிலம், பொதுத்திறமை |
| ஜீ. நளின்பிரதீபன் | சுகாதாரம் உடற்கல்வி, பொதுத்திறமை |
| சி. சிவகரன் | சங்கீதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 9

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| ந. சசிரேகா | சைவசமயம், தமிழ், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக்கல்வி, சுகாதாரம் உடற்கல்வி, சங்கீதம், பொதுத்திறமை |
| சி. பிரசாந்தினி | கணிதம், ஆங்கிலம், பொதுத்திறமை |
| வி. கிருஷாந்தன் | பொதுத்திறமை |

## தரம் - 10

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் |
|---|---|
| ந. சுபாஜினி | சைவசமயம், தமிழ், வரலாறும் சமூகக்கல்வியும், ஆங்கிலம், சங்கீதம், மனைப்பொருளியல், விசேட இலக்கியம், புவியியல், பொதுத்திறமை |
| ம. வினோஜ் | கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும், வர்த்தகமும் கணக்கியலும், பொதுத்திறமை |

## தரம் - 11

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் பாடசாலை மட்டம் | க.பொ.த சா/த பரீட்சை தேசிய மட்டம் விசேட சித்திA |
|---|---|---|
| க. அனுஷன் | தமிழ்மொழி, சைவசமயம், விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும், வர்த்தகமும் கணக்கியலும், புவியியல், பொதுத்திறமை | சைவசமயம், மொழியும் இலக்கியமும், சங்கீதம், வணிகமும், கணக்கீடும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பரிசுக்குரியவர் பெயர் | பாடங்கள் பாடசாலை மட்டம் | க.பொ.த சா/த பரீட்சை தேசிய மட்டம் விசேட சித்திA |
|---|---|---|
| அ. சரளா | கணிதம், ஆங்கிலம், சங்கீதம், விசேட இலக் கியம், பொதுத்திறமை | சைவசமயம், மொழியும் இலக்கியமும், சங்கீதம், தமிழ் இலக்கியம் |
| சி. சுரேணுகா | வரலாறும், சமூகக் கல்வியும், பொதுத்திறமை | சைவசமயம், மொழியும் இலக்கியமும் |
| சி. நிரஞ்சலா | மனைப்பொருளியல் | - |
| ந. சுதர்சன் | - | சங்கீதம் |
| சி. கலைவாணி | - | சைவசமயம் |
| க. அகல்யா | - | சைவசமயம் |

சிறந்த பெறுபேறு

க. அனுஷன் 4A, 3B, 2C, W

## ஆகக் கூடிய மாணவர் வரவு – 2002

| | |
|---|---|
| ஜெ. கிருஷ்ண லக்சுமி | தரம் - 2 |
| ஜெ. சுதர்சன் | தரம் - 6 |
| ந. சுபாஜினி | தரம் - 10 |

பாடசாலையில் சிறந்த மாணவன் ம. வினோஜ் – தரம் 11

பாடசாலையில் சிறந்த மாணவி ந. சுபாஜினி – தரம் 11

## கட்டுரைப் போட்டி 2002

**தரம்: 5**

1ம் இடம் - செல்வன் ப. தயாபரன்

2ம் இடம் - செல்வி சு. தனா

3ம் இடம் - செல்வன் தி. திவாகரன்

**கீழ்ப்பிரிவு**

1ம் இடம் செல்வன் சி. தவசீலன்

2ம் இடம் செல்வி க. மயூரி

3ம் செல்வி க. லதா

**மத்திய பிரிவு**

1ம் இடம் செல்வி யோ. ரஜனிகலா

2ம் இடம் செல்வி ஜெ. கோபிசாளினி

3ம் இடம் செல்வி சு. விஜிதகலா

**மேற்பிரிவு**

1ம் இடம் செல்வி ந. சசிரேகா

2ம் இடம் செல்வி ந. சுபாஜினி

3ம் இடம் செல்வி சி. பிரசாந்தினி
செல்வி. ம. வினோஜ்

## பேச்சுப் போட்டி 2002

**கீழ்ப்பிரிவு**

1ம் இடம் - நா. பதுர்சிகா

2ம் இடம் - செல்வி. ச. கோமதி

3ம் இடம் - செல்வி செ. பிரந்தினி

**மத்திய பிரிவு**

1ம் இடம் செல்வன்.வி.கிருஷானந்தன்

2ம் இடம் செல்வன் ஜீ. நசீன் பிரதீப்

3ம் செல்வி சி. தர்சினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

உயிரினம் எமை அருள்
தாயகம் இனிதே
உணர்வொடு போற்றுவோம்
வாரீர், வாரீர், வாரீர்

ஓங்குக கல்வி செல்வமோழிகை
ஒளிவிக தெய்விக வாழ்க்கை
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமசர வேட்கை

ஒருகுலமென உயிர்வாழ்வோம்
உளமது நடுநிலை சேர்வோம்
உடல் பொருள் ஆவியும் மீவோம்
நலமுற நாவலர் மகா வித்தியாலயம்

நிலமிசை நிறைவொடு நீடிய புகழ் பெற
வடமொழி தென்மொழி ஆங்கிலம் பயின்றிடும்
பாலர்கள் நாம் தினம் வணங்கிடுவோம்
வணங்கிடுவோம், வணங்கிடுவோம்.

துர்க்கா அச்சகம் கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்ட்
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் பாடசாலை முன்பாக) T. P. 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org